<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**IN THE COURT OF JM.No.II, DHARMAPURI.**</u>

**PROSECUTION OF WITNESS**

**CC.No.329/2019**

| | | | |
|---|---|---|---|
| NAME | : | CALLING | : |
| FATHER'S NAME | : | RELIGION | : |
| VILLAGE | : | AGE | : |
| TALUK | : | DATE | : **30.07.2026** |

(Oath shall be affirmed as per the provisions of The Oaths Act, 1969) (Act 44 of 1969)

**Accused present.**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**PW-8 : திரு.துரைராஜ் (காவல் ஆய்வாளர்)**

<u>**முதல் விசாரணை**</u>

நான் கிருஷ்ணகிரி மாவட்டம் பேரிகை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.10.2018ம் அன்று சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.பாலகிருஷ்ணன் என்பவர் பதிவுசெய்த இண்டுர் காவல் நிலைய குற்ற எண். 123/2018, சட்டபிரிவுகள் 279, 337 இதச @ 279, 337, 304(A) இதச வழக்கை என்னுடைய பார்வைக்கு வைத்ததை விசாரணைக்கு எடுத்துகொண்டு, அவர் விசாரணையில் சம்பவ இடமான பென்னாகரம் – தருமபுரி மெயின்ரோட்டு, அதகபாடி இபி ஆபிஸ் அருகே சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டதில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.பாலகிருஷ்ணன் அவர்கள் பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார். மேலும் இவ்வழக்கில் விபத்தில் இறந்த முருகன் என்பவர் தருமபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கில் இருந்ததால் அங்கு சென்று பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகளுக்கு சம்மன் பிறப்பித்து 08.00 – 10.00 மணிவரை பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தார். பின்னர் இறப்பின் உண்மையான காரணம் அறியும்பொருட்டு பிரேத பரிசோதனை செய்ய தலைமை காவலர் 273 திரு.காமராஜ் என்பவரை நியமித்து அவரிடம் பணி மருத்துவருக்கு பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதத்தை படிவம்-86 ஆகியவையை 10.15 மணிக்கு கடவுசீட்டு கொடுத்து அனுப்பிவைத்தேன். பின்னர் சாட்சிகள் நிதீஷ், சண்முகம், முருகன், மாதையன், சங்கர், பாஞ்சாலை, கணேசன், சண்முகம், சின்னபையன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்தார். அவர் வழக்கை மேல் விசாரணைக்காக என் பார்வையில் வைத்ததின்பேரில் நான் வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்டு மேற்கண்ட சாட்சிகளை விசாரணை செய்ததில் காவல் ஆய்வாளர் ஜெய்சங்கர் அவர்களிடம் சொன்னதை என்னிடம் சொன்னதால் தனியாக சாட்சிகளை வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்பு இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனங்களாக TN-29 BD-4735 மற்றும் TN-29 BH-1496 என்ற வாகனங்களை மோட்டார் வாகன

ஆய்வறிக்கைகளை மோட்டார் வாகன ஆய்வாளர் ராஜாமணி அவர்களை விசாரித்து ஆய்வறிக்கைகளை பெற்றேன். பின்பு பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் அமிர்தா என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று, பின்பு சாட்சி பாஞ்சாலை என்பவருக்கு மருத்துவர் ராஜசேகரன் என்பவரை விசாரித்து காயச் சான்றிதழ் பெற்றேன். மருத்துவர் அளித்த காயச் சான்றிதழின் அடிப்படையில் சட்டப்பிரிவுகள் 279, 337இல் இருந்து 279, 338, 304எ ஆக 29.08.2019 அன்று சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை கனம் குற்றவியல் நடுவர் எண்.2க்கு அனுப்பி வைத்தேன். இத்துடன் புலன் விசாரணையை முடித்து கொண்டு நிலையம் வந்து 29.08.2019 அன்று எதிரி மணிகண்டன் மீது 279, 338, 304எ இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். 29.08.2019 அன்று **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.11, பாஞ்சாலை என்பவரின் காயச் சான்றிதழ் அ.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

இந்த விபத்தில் TN–29 BD–4735 மற்றும் TN–29 BH–1496 என்ற பதிவெண்கள் கொண்ட வாகனங்கள் ஈடுபட்டது என்றாலும், 20.10.2018 அன்று சம்பவம் நடந்தது என்றால் சரிதான். 28.11.2018 அன்று தான் மோட்டார் வாகன ஆய்வாளருக்கு சோதனைக்காக அனுப்பப்பட்டது என்றாலும், அந்த காலதாமதத்திற்கான காரணம் என்னவென்றால் பல வழக்குகள் கையாள வேண்டி இருந்ததால் ஏற்பட்டது. TN–29 BD–4735 என்ற வாகனத்திற்கு Registration certificate, licence, policy முதலியவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்று சம்பவ இடத்திற்கு சென்று நான் விசாரித்தேன், சாட்சிகள் அதைபோன்றே கூறியதால் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. விபத்தில் இறந்தவர் மதுபோதையில் இருந்ததாக விபத்து பதிவேட்டில் மருத்துவர் குறிப்பிட்டு பின்னர் அதை அடித்துள்ளதை பற்றி நான் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. விபத்தில் இறந்தவர் மதுபோதையில் வாகனத்தை ஓட்ட தெரியாமல் அவருடைய கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கும் எதிரிக்கும் சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இழப்பீடு பெறுவதற்காக எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.07.30 16:03:28 +0530